# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-2
Date : 23.01.2024
Case No. : **O.S.** 40-2019
Nationality : Indian
Name : தங்கவேல்
Religion :
Father's/Husband's Name : வெள்ளைச்சாமி
Age : 42
Village :
Taluk :

வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் இவ்வழக்கில் 2019 ம் ஆண்டு சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் 2019 ம் ஆண்டு 3 ம் மாதம் சாட்சியம் அளித்துள்ளேன். அப்போது நான் திருவிடைமருதூர் வட்டாட்சியம் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். அப்போது குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் எனது அலுவலத்தில் இருந்து எடுத்து எந்தேனா அல்லது நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டதா என்றால் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டது. நான் தாவா சொத்தினை பார்வையிட்டேனா என்றால் இல்லை. நான் சாட்சி சொன்ன சமயத்தில் அந்த கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராக இல்லை என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர்தான் சொத்தினை பார்வையிட்டு ஒவ்வொரு பசலிக்கும் அடங்கல் எழுதி கொடுப்பார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி சாகுபடி செய்ததை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை பார்வையிடவில்லை என்பதால் வாதி தாவா சொத்தில் அனுபவம் செய்து வருவதாக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் என்னிடம் காண்பிக்கப்பட்ட சான்றின் படி வாதி தாவா

சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றுதான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தால்தான் தாவா சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்று உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரிதான்.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

ஒப்பம்/- நா. சிவபழனி,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.